**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 169 / 2021**

Deposition of PW - 1 Petitioner / Respondent solemnly affirmed by P.Saraswathi, Bench Clerk Grade-II of this court on 11.09.2024 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அம்சரத்தினம்** | Age | : | 34 |
| Husband Name | : | **சிவபாலாஜி** | Village | : | **வெங்கமேடு** |
| Calling | : | | Taluk | : | **மண்மங்கலம்** |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன். வழக்கு விபத்து சம்பந்தமாக வெங்கமேடு காவல்நிலைய குற்ற எண்.152/2019 ல் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை நீதிமன்ற சான்று நகல் - **ம.சா.ஆ.1**. மேற்படி குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை நீதிமன்ற சான்று நகல்- **ம.சா.ஆ.2**. TN 47 AL 4944 என்ற எண்ணுடைய இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நீதிமன்ற சான்று நகல் - **ம.சா.ஆ.3** மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்று நகல் - **ம.சா.ஆ.4**. மேற்படி குற்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை நீதிமன்ற சான்று நகல் - **ம.சா.ஆ.5**. குமரன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையால் எனக்கு வழங்கப்பட்ட காயச்சான்றின் நீதிமன்ற சான்று நகல் - **ம.சா.ஆ.6**. கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை வழங்கிய விடுவிப்புச் சான்று அசல் - **ம.சா.ஆ.7**. குமரன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை வழங்கிய விடுவிப்புச் சான்று 05.08.2019 ம் தேதியிட்டது அசல் - **ம.சா.ஆ.8**.

குமரன் மெடிக்கல் செண்டர் மருத்துவமனை வழங்கிய விடுவிப்புச்சான்று 24.07.2023 ம் தேதியிட்டது அசல் - **ம.சா.ஆ.9**. நான் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டதற்கான மருத்துவ பில்கள் ரூ.5,77,075/-க்கானது தாக்கல் செய்கிறேன் - **ம.சா.ஆ.10** வரிசை. என்னுடைய அடையாளம் மற்றும் முகவரியைக் காட்டக்கூடிய ஆதார் அடையாள அட்டை நகல் - **ம.சா.ஆ.11**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

கால அவகாசம் கோரப்பட்டதால் ஒத்தி வைக்கப்பட்டது.

சாட்சி கூறிய சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.சி.சொர்ணகுமார்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.